# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க,
# இலங்கைத் துறைமுக அதிகாரசபை
# (திருத்தச்) சட்டம்

---

*[1992, பெப்ருவரி மாதம் 19 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1992, பெப்ருவரி மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.***

***கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.***

***விலை: சதம் 45*** ***தபாற் செலவு: ரூபா 1.00***

## 1992 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

[1992, பெப்ருவரி மாதம் 19 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

எல். டி.—ஓ. 28/89

**1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (1984 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1984 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான) 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகிறது :— 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) "பகிரங்க ஏலத்தின் மூலம் விற்கலாம்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பகிரங்க ஏலத்தின் மூலம் அல்லது கேள்விப் பத்திரங்களைக் கோருவதன் மூலம் விற்கலாம் அல்லது கையாளலாம்" என்ற சொற்களை இடுவதன் மூலம் ;

(ஆ) அதனகத்துள்ள பந்தி (ஆ) வில் "விற்பனைக்கான அல்லது கையாளுகைக்கான தேதியை பிரதான சுங்கச் சேகரிப்பாளருக்கு எழுத்தில் அறிவிக்கும் வரையும் அத்துடன், அத்தகைய கையாளுகைக்கு அல்லது விற்பனைக்கும் அத்தகைய சாமான்களை விலை மதிப்பதற்கும் பிரதான சுங்கச் சேகரிப்பாளரின் ஒருப்பாடு பெறப்படும் வரையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பகிரங்க ஏலத்தின் அல்லது விற்பதற்கான அல்லது கையாளுகைக்கான தேதியை அல்லது கேள்விப்பத்திரங்கள் கோருவதற்கான அறிவித்தற் தேதியைப் பிரதான சுங்கச் சேகரிப்பாளருக்கு எழுத்தில் அறிவிக்கும்வரையும் அத்துடன் பகிரங்க ஏலத்தின் மூலமான அத்தகைய விற்பனைக்கு அல்லது கையாளுகைக்கு அல்லது கேள்விப் பத்திரங்களைக் கோரும் அறிவித்தலுக்குப் பிரதான சுங்கச் சேகரிப்பாளரின் ஒருப்பாடு பெறப்படும்வரையும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் ;

(இ) அதனகத்துள்ள பந்தி (ஈ) இன் "அத்தகைய விற்பனையின் போது எவருமே விலை கேட்காவிட்டால்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய பகிரங்க ஏலத்தின் மூலமாக அத்தகைய விற்பனையின் போது அல்லது கையாளுகையின் போது

எவருமே விலை கேட்காவிட்டால் அல்லது கேள்விப்பத்திரங்களைக் கோரும் அறிவித்தலுக்கு கேள்விப்பத்திரம் எதுவும் பெறப்படாவிட்டால்" என்ற சொற்களை இடுவதன் மூலம்.

ஒவ்வாமை காணப்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.